# கலித்தொகையில் விளையாட்டும் பொழுதுபோக்கும்

*முனைவர் அ. அமலஅருள் அரசி*
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
தூயமரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி

மலர்: 4
இதழ்: 1
மாதம்: ஜூலை
வருடம்: 2019
ISSN: 2454-3993

மனிதன் வழக்கமான அன்றாட வாழ்க்கை முறைமையிலிருந்து சிறிது நேர மாற்றத்தையும் மகிழ்ச்சியையும் எதிர்பார்க்கும் மனப்போக்கினை உடையவன். அதற்கு வழிவகுக்கும்வகையில் தேர்ந்து கொண்டதே விளையாட்டும் பொழுதுபோக்கும். சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையில் இடம்பெறும் விளையாட்டும் பொழுதுபோக்கும் அக்காலமக்களின் நாகரிகம், பண்பாடு இவற்றை எடுத்துரைப்பனவாகவும், அவர் தம் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை முறையைப் பிரதிபலிப்பனவாகவும் அமைந்துள்ளன.

விளையாட்டு உடல்நலம், மனநலம் இவற்றைப் பேணிபாது காப்பதாக அமைகின்றது. "சிக்கல் மிகுந்த சமூகவாழ்க்கையில் பின்னர் ஈடுபடவேண்டியிருப்பதற்கு இளம் வயதிலேயே அவற்றை எதிர்நோக்கும் பயிற்சியை விளையாட்டு அளிக்கிறது." என்பது ஆயத்தக் கொள்கையை வலியுறுத்தும் கார்ல் குரூஸ், மெல்பிரான்சு ஆகியோர் கருத்து.

சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகையில் சிறுவர், சிறுமியர், ஆடவர், மகளிர் அனைவரும் விளையாடியுள்ளனர். தங்கள் பொழுதை மகிழ்ச்சியாகக் கழித்துள்ளனர். அம்புலி விளையாட்டு, சிற்றிலிழைத்தல், சிறுதேருருட்டல், சிறுசோறாக்கல், தழூஉ, பாவை, விளையாட்டு, பந்து விளையாட்டு, நீர் விளையாட்டு, ஓரை விளையாட்டு, தாயம் முதலிய விளையாட்டுகளில் ஈடுபட்டுள்ளனர். மலர் கொய்தல், ஊஞ்சலாடல், யாழிசைத்தல் போன்ற பொழுதுபோக்கிலும் நேரத்தைச் செலவிட்டுள்ளனர். இவற்றை ஆராய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### அம்புலி விளையாட்டு

குழந்தைக்கு திங்களைக் காட்டி விளையாடுதல் அம்புலி விளையாட்டு எனப்படும். ஐயனே! திங்களாகிய குழவீ! நீ இவனுடனே விளையாடும்படி வருவாயாக என்று கூறி அம்புலிக்கு யான் நின்னைக்காட்டி மகிழ்தல் எமக்கினிது (கலி.80:18-19) என்பது அம்புலி விளையாட்டிற்கான சான்றாக அமைந்துள்ளது.

### சிற்றிலிழைத்தல்

சிறுபெண்கள் மணலால் சிறிய வீடுகளைக்கட்டி விளையாடுதல் சிற்றிலிழைத்தல் எனப்படும். சிற்றில்அமைத்து விளையாடியமை கலித்தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**சுடர்தொடீஇ கேளாய் தெருவில் நாம் ஆடும்**
**மணற்சிற்றில் காலிற் சிதையா அடைச்சிய**
**(கலி.51:1-2)**

பாங்கர் கொடியும் முல்லைக்கொடியும் பரந்த முற்றூட்டாகிய தோட்டத்திற்கே நம்முடைய ஆட்டினத்தையுடைய ஆயர் மகளிரோடே பசுவினம், எருமையினம் என்னும் இரண்டையுமுடைய ஆயர் மகளிரெல்லாம் சேர்ந்து விளையாடிநிற்ப, அவ்விடத்தே வந்து குருந்தம் பூவாற் செய்த கண்ணியையுடைய பொதுவன் பின்னை என்னை நோக்கி சூழ்ந்து அணிகளையும் அழகினையும் மடப்பத்தையும் உடைய நல்லாய்! இழைத்துவிளையாடும் சிற்றிலையானும் சிறிது புனைவேனோ என்றான். (கலி.111:3-9) அறலினையுடைத்தாகிய மணலினையுடைய துறையின் முன்னே சிற்றிலிழைத்து விளையாடிய அழகிய நுதலினையுடைய ஆயத்தார் தம் முளேநின்று யான் தனியே நீங்கினேனாக (கலி.114:12-14), (கலி.142:25) என்பவை சிற்றிலிழைத்து விளையாடியமைக்குச் சான்றுகளாக அமைந்துள்ளன.

### சிறுதேருருட்டல்

சிறுதேர் என்பது விளையாட்டுத்தேர். நடை பழகும் வண்டி எனவும் குறிப்பிடப்படும். முற்றத்தே உருளையோடுதல் வல்லத் தேரைக் கையாலே செலுத்தி நடத்தலைக் கற்ற ஆலின்கீழ் அமர்ந்த இறைவனுடைய அழகமைந்த முருகனைப் போல வரும் என்னுயிரே (கலி.81:7-10) என்று தாய் தன் மகனைக் குறிப்பிடப்பட்டுள்ள செய்தி சிறுவர் நடக்கக் கற்றுக்கொள்ளும் பொருட்டு சிறுதேருருட்டி விளையாடியுள்ளமையைப் புலப்படுத்துகின்றது.

### சிறுசோறாக்கல்

சிறுபெண்கள் சோறு சமைத்து விளையாடுதல் சிறுசோறாக்கல் எனப்படும்.

**பொய் தலமகளையாய்ப் பிறர்மனைப் பாடிநீ**
**யெய்தியபலர்க்கீத்தபயம்பயக் கிற்பதோ**
**(கலி.59:16-17)**

**சிறுமுத்தனைப் பேணிச் சிறுசோறுமடுத்துநீ**
**நறுநுதலவரொடு நக்கது நன்கியைவதோ**
**(கலி.59:21-22)**

என்று பொம்மைக்கு திருமணம் செய்வித்து சிறுசோறு சமைத்து ஆயத்திற்கு இட்டு மகிழ்ந்திருந்த செய்தியினை இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

### தழூஉ

பிள்ளைகள் தம்மிற் கூடிவிளையாடும் விளையாட்டு தழூஉ எனப்படும்.

**இளையவர் தழூஉவாடும் எக்கர்வாய்**
**வியன்தெருவின்**
**விளையாட்டிக் கொண்டுவரற்கெனச் சென்றாய்**
**(கலி.83:3-4)**

என்னும் வரிகளில், பிள்ளைகள் தம்மிற் கூடி விளையாடும் இடத்தையுடைய இடுமணலையுடைய அகற்சியையுடைய தெருவிலே பிள்ளையை விளையாடுவித்துக் கொண்டு வருவதற்கென்று போன நீ என்னும் பதிவு தழூஉ விளையாட்டிற்கானகச் சான்றாக அமைந்தள்ளது.

### பாவை விளையாட்டு

வண்டற்பாவை (மணற்பாவை), மரப்பாவை, சாய்பாவை (கோரைப்புற்பாவை) முதலிய பாவை விளையாட்டுகளை மகளிர் விளையாடியுள்ளனர்.

மணற்பரப்பில் தமக்குத் தெரிந்தவற்றின் வடிவிலான பாவைகளை உருவாக்கி விளையாடுவது வண்டற்பாவை விளையாட்டு எனப்படும். வளையினையுடைய இளையோர் இளைத்த வண்டற்பாவையும் புவும் கலந்து கிடந்தாற் போல வார்ந்தமணல், புக்கள் உதிர்ந்து கிடந்தவடுவை தன்னிடத்தே கொள்ள, இளைய மகளிருடைய மயிர்போல இடுமணலை ஊடறுத்தலையுடையநீர்ஒழுக.(கலி.29:5-6)என்று மணற்பாவை அமைத்து விளையாடியமை பதிவு செய்யப்பட்டுள்ளது.

மரத்தாலான சிறுபாவைகளை வைத்து விளையாடியுள்ளனர். இங்குலிகம் எழுதிய ஒளிவிரிந்த தொழில்களையுடையவாகிய வாய்களையுடைய மரத்தாற் செய்த சிறுபானையாலும் பாவையாலும் விளையாடுதற்கு, உள்ளிடுமணியிட்ட அழகமைந்தபுனைந்த தொழில்களையுடைய அழகிய சிலம்புகள் மிக ஆரவாரிப்ப, அழகினையுடைய சில அடியிட்டு நடக்கும் நின்னுடைய இளமை நீங்குதலாற் பின்னுதல் விட்டு இருண்ட ஐம்பாலைக் கண்டு என்னிடத்து உண்டாகிய அறிவு முதலியனஎன்னைவிட்டுப் போம்படியாகப் போகின்றவளே என்பதை உணர்த்தும்,

**சுடர்விரி வினைவாய்ந்த தூதையும் பாவையும்**
**விளையாட அரிப்பெய்த அழகமை புனைவனை**
**ஆய்சிலம் பெழுந்தார்ப்ப அஞ்சில இயலுநின்**

**பின்னுவிட் டிருளிய ஐம்பால்கண் டென்பால**
**என்னைவிட் டிகத்தர இறந்தீவாய் கேளினி**

**(கலி.59:5-9)**

இப்பாடலடிகள் வேலைப்பாடுகள் அமைந்ததும் வண்ணம் பூசப்பட்டதும் மரத்தாலானதுமான பொம்மைகளை வைத்துப்பெண்கள் விளைபாடியுள்ளனர் என்னும் செய்தியை உணர்த்துகின்றது. கோரைப்புற்களால் செய்த பாவையினை வைத்தும் விளையாடியுள்ளனர்.

### பந்து விளையாட்டு

நூலினால் வரிந்து கட்டப்பட்டப் பந்தினைக் கொண்டு விளையாடுதல் மகளிர் வழக்கம். இப்பந்தினைத் தெருவீதிகளிலும், வீடுகளிலும் விளையாடியுள்ள செய்தியினையும் தெரிந்துகொள்ள முடிகின்றது.

**“கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி**
**நோதக்க செய்யுஞ் சிறுபட்டி”**

**(கலி.51:3-4)**

என்றும, “நின்னுடைய இளமைப் பருவத்தாலே செல்வம் அமைந்த உயர்ந்த தலைமையினையுடைய நுந்தையுடைய பழமையுடைத்தாகிய இகற்சியையுடைய மனையினின்றும் அடிக்கின்ற பந்தோடே தளர்ந்து ஒதுங்கி புறப்படுதலைச் செய்தவளே (கலி.57:6-7) என்றும் பதிவு செய்யப்பட்டுள்ளவை பெண்கள் பந்து விளையாடியமையை உணர்த்துகின்றன.

### நீர் விளையாட்டு

ஆடவரும் மகளிரும் நீர்நிலைகளில் புனலாடி மகிழ்ந்துள்ளனர்.

**“புனையிழை நோக்கியும் புனலாடப் புறஞ்சூழ்ந்தும்**
**அணிவரிதை இயுநம் இல்வந்து வணங்கியும்**
**நினையுபு வருந்துமிந் நெடுந்தகை”**

**(கலி.76:1-3)**

என்னும் வரிகள் நீர் விளையாட்டு விளையாடியமையைப் புலப்படுத்துகின்றன.

### ஓரையாடுதல்

இது மகளிர் விளையாடும் விளையாட்டு களுள் ஒன்று. ஆமை, நண்டு போன்றவற்றை கோல்கொண்டு அலைத்து விளையாடும் விளையாட்டாக இது அமைந்துள்ளது.

“மடக்குறு மாக்களோடோரைய யரும்”

**(கலி.82:9)**

என்பது இவ்விளையாட்டு குறித்து கலித்தொகையில் இடம்பெறும் செய்தியாகும்.

**தாயம்**

முத்தையொக்கும் கவற்றாலே ஈரைந்தைப் பெற்றவனுடைய மனம் போல ஆக்கம் பெருகினள். அங்ஙனம் அளிக்குங் கூற்றினின்று நீ நீங்கு கையினாலே அப்பெருந்தாயமின்றி ஈரிரண்டு கட்டலாம் படி கவற்றாலே ஈரைந்துப் பெற்றவனுடைய மனம் போல ஆக்கம் பெருகினள். அங்ஙனம் அளிக்குங் கூற்றினின்று நீ நீங்கு கையினாலே அப்பெருந்தாயமின்றி ஈரிரண்டு இருமூன்று என்னும் சிறுதாயம் இடுதலால் தோற்றவனைப்போல அழகு கெட்டு வெய்தாகிய வருத்தத்திலே அழுந்தவோ? (கலி.136:5-8) என்பதன் மூலம் தாயம் விளையாடும் வழக்கம் இருந்துள்ளது என்பதை உணரமுடிகின்றது.

**விளையாட்டிடங்கள்**

பொழில்கள், தெருக்கள், மணற்பரப்பு, வீட்டகம் போன்றவை விளையாட்டிடங்களாக அமைந்துள்ளன. நாறுகின்றகரிய கூந்தலையுடைய பொது மகளிரெல்லாரும் முல்லையையுடைய குளிர்ந்த பொழிலிடத்தே விளையாடுதற்கு புக்கார். நாமும் விளையாடுதற்குச் செல்வோம் என்றாள். (கலி.101:48-50) தெருக்களில் கோதை போல ஒழுங்குவிட்டு விளையாடும் ஆயத்தார். (கலி.122:1)மணற்பரப்பு(கலி.29:5-6) நீர்நிலைகள் (கலி.76:1-3)

**“வளமை சாலுயர் சிறப்பின் நுந்தை தொல் வியனகர்
இளமையான் எறிபந்தோடிகத் தந்தாய் கேயினி”**

(கலி.57:6-7)

போன்றவை இதற்குச் சான்றுகளாக உள்ளன.

**பொழுதுபோக்கு**

ஒரேவிதமான பணியில் தொடர்ந்து ஈடுபடுவதிலிருந்து மாற்றம் பெற்று புத்துணர்ச்சியும், மகிழ்ச்சியும் அடைவதற்கு வழி வகுப்பனவற்றைப் பொழுதுபோக்கு எனலாம். வழக்கமான பணியில் தொடர்ந்து சுறுசுறுப்பாகச் செயலாற்றுவதற்கான சக்தியை இதன்மூலம் பெற முடிகிறது. விருப்பமான பொழுதுபோக்கினை மகிழ்ச்சியோடு மேற்கொள்ளும் போது புத்துணர்ச்சி கிடைக்கிறது.

**மலர்கொய்தல்**

மரம், செடி, கொடி போன்றவற்றின் அழகிய மலர்களைப் பறித்தும், தொடுத்தும் மகளிர் தம் பொழுதைக் கழித்துள்ளனர்.

நீர் நிறைந்த செய்யில் வளர்ந்த ஒத்த இதழையுடைய நெய்தற் பூவோடு ஆம்பலினது நிரைத்த இதழையுடைய புக்களைப் பறித்துக் கோடற்குத் தலைமை நிறைந்த சிவந்த சிலம்பு முதலியன ஒலிப்ப ஓடுகின்ற மகளிருடைய ஆரவாரம். (கலி.75:1-4) இடமகன்ற பெரிய விசும்பிலே விரைந்து வருகின்ற மழை தன்னிடத்தே கலக்கையினாலே அதனை ஏற்றுநின்ற தண்ணிய நறியபிடவம், படர்கின்ற கொடியினையுடையமுல்லை, நிறத்தினையுடைய வளவியதோன்றி, விளங்குகின்ற கொத்தினையுடைய கொன்றை முதலியனவும் இவை போல்வனபிறவும் பூத்த மலர்கள் நெருங்கும்படி தழையுங் கோதையும் இழையுமென்று சொல்லுகின்ற இவற்றைக் கட்டினராய் அணிந்து மகிழ்ந்து திளைத்த அடப்பத்தையுடைத்தாகிய மொழியினையுடைய ஆயத்தார். (கலி.102:1-7) இவை கலித்தொகையில் மகளிர் மலர் கொய்து மகிழ்ந்து அணி செய்தமையை எடுத்துரைப்பனவாக உள்ளன.

**ஊஞ்சலாடல்**

மரத்தின் உயர்ந்த கிளைகளில் கயிற்றினை ஊசலாகக்கட்டி அதிலமர்ந்து

ஆடி மகிழ்ந்துள்ளனர். தினை புனத்தின் அருகாமையில் ஊஞ்சல் கட்டி விளையாடியுள்ளனர். உடல் சோர்வினைப் போக்குதற்கு இப்பொழுதுபோக்கினை மேற்கொண்டுள்ளனர்.

இனமான மீன்களது மாறுபாடு கெடதாக்கி வென்ற சினத்தையுடைய மீனாகிய எறியுஞ் சுறா வினது மருப்பாற் செய்த பலகையைக் கோத்துப்புற விதமொழிடித்த நெய்தற்புவை நெடியநாரிலே தொடுத்து அழகுபெறக் கட்டிக் கையாலே வாசித்தலையுடைய யாழினது ஓசையைத் தம்மிடத்தேக் கொண்ட இனமான வண்டுகள் ஆரவாரஞ் செய்துப் பாடத் தாழாமல் தேன் துளிக்கும் வளைவை யுடைத்தாகிய மலரையுடைய தாழையினது விழுதாற் திரித்து இட்ட ஊசலை நீ போந்து ஆடப்பெறின் நீரையுடைய பெரிதாகிய கடலாகிய தெய்வத்தை நோக்கி நின்னிற் பிரியேன் என்று தெளிவித்து உன்னுடையதிருந்தின இழையையுடைய மென்றோளைக் கூடினவன் அருமை செய்தயர்த்தலால் நினக்குண்டாகிய அரியவருத்தத்தையான் அவனை எதிர்ப்பட்டுமிகவும் தீர்க்குவேன் போல இருந்ததென்றாள். *(கலி.131:6-11)* தலைவியை நோக்கி தோழி இளமையையுடையமடமான் பிணையினது நோக்கின் இயல்பை வென்றவளே நின் தடமென்றோளைக் கைவிட்டவனுடைய கொடுமையினது கூறுகளைச் சொல்லிப்பாடி நீ ஏறின ஊசலையான் உயரச் செலுத்தித் தாழ்த்து ஆட்டநெடும் பொழுது ஆடாய் என்றாள். *(131:11-14)*

**“…நறுநுதால் ஏனல்**
**இனக்கிளியாங்கடிந் தோம்பும் புனத்தயல்**
**ஊசலூர்ந் தா”** *(கலி.37:12-14)*

என்பன மகளிர் ஊசலாடி மகிழ்ந்தமைக்கானச் சான்றுகளாக அமைந்துள்ளன.

### எதிரொலி கேட்டல்

குகைப்பகுதி, மலைப்பகுதி போன்ற இடங்களுக்குச் சென்று மகளிர் தம் மனதில் உள்ளவற்றை உரக்கக் கூவிகுரல் எழுப்பி அந்த ஒலி எதிரொலித்து வருகைக் கேட்டு மகிழ்ந்துள்ளனர்.

விளங்குகின்ற தாழ்ந்த அருவியாலே அழகு கொண்டநின்மலையின் பக்கமலை கூறுவனவே கூறுமாறு போல நீ கூறுவனவற்றையே கூறும் இலங்குகின்ற அழகினையுடையவள். *(கலி.46:25-27)* என்பது எதிரொலி கேட்டு மகிழ்ந்தமைக்குச் சான்றாக உள்ளது.

### யாழிசைத்தல்

விரும்புவார்க்கு நேயமாய் விரலாலே வாசிக்கப்பட்டு ஒலிக்கும் நரம்பு ஏழும் தம்முடைய பயன் இன்றாம் படிதானக்கோலின் அகப்பட்டு இடைநின்ற நரம்பு அற்றுப்போம் யாழினுங்காட்டில் நிலைபேறில்லாதபொருளை அறிவுடையோர் விரும்பார். *(கலி.8:9-11)* ஏழு நரம்பாற் கூட்டிய இனிய ஓசைகள் பாடுவார்க்குப் பயன் கொடுத்தலல்லது யாழிடத்தே பிறந்தனவாயினும் அவ்வோசையால் யாழுக்கு என்ன பயன். *(பலி.9:18-19)* என்பன யாழிசையில் பொழுதுபோக்கி இன்புற்றமையைப் பதிவு செய்துள்ளன. “இயற்கையின் துணையின்றி மனிதனால் ஒரு நிமிடம் “கூட உயிர் வாழ முடியாது. இயற்கையை அண்டி பிழைக்கும் ஒரு சாதாரண படைப்புதான் மனிதன்.”2 என்னும் கருத்தை நிலைநிறுத்து வது போல கலித்தொகை வாழ்வியல் கூறுகளான விளையாட்டும் பொழுது போக்கும் அமைந்துள்ளன.

### முடிவுகள்

கலித்தொகையில் இடம்பெறும் விளையாட்டுகளும் பொழுதுபோக்குகளும் நிலம், நீர், காற்று, மரம் போன்ற இயற்கைவளங்களைப் பாதுகாத்து மனித இனத்திற்கு நன்மை பயப்பனவாக அமைந்துள்ளன.

இயற்கையோடு இயைந்த உயிரோட்டமான, உணர்ச்சிகளின் உறைவிடமாக அமைந்துள்ளன.

சிறுவர் நடைபழகுதற் பொருட்டு சிறுதேர் உருட்டியுள்ளனர்.

மரத்தாலும்,கோரைப்புற்களாலும் செய்யப்பட்ட பொம்மைகளை வைத்து விளையாடியுள்ளனர்.

தாழையினது விழுதாற் திரித்து இட்ட ஊசலில் ஆடியுள்ளனர்.

வாழ்க்கையின் அடிப்படையைக் கற்றுக் கொடுத்து, சமூக ஒற்றுமைக்கு வழிவகுப்பனவாக அமைந்துள்ளன. “அழகுணர்ச்சி, எளிமை, இயல்புத் தன்மை இவற்றைக் காணமுடிகின்றது.

விளையாட்டும் பொழுதுபோக்கும் குழு நடவடிக்கையாக இருப்பதால் சமூகத் தொடர்பு விரிவடைதற்கு வழிவகுக்கிறது.

பொறுமை, அன்பு, விட்டுக் கொடுத்தல், உதவும் பண்பு முதலான நல்மதிப்பீடுகளைக்கற்றுக்கொடுப்பனவாக அமைந்துள்ளன.

## குறிப்புகள்

1. சக்திவேல்,சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை.பக்.247-248.
2. சம்பத் குமார்,த., சுற்றுச்சூழல் கல்வி, பாவைபப்ளிகேஷன்ஸ்,சென்னை, ப.48.